


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## அக்டோபர் - 30.10.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்









## தமிழக நிகழ்வுகள்

- இந்தியாவிலேயே முதல்முறையாக **ஒப்பந்த சாகுபடி செய்யும் விவசாயிகள் நலன் காக்க புதிய சட்டத்தை தமிழக அரசு அமல்படுத்தியுள்ளது.**
    - தமிழகத்தில் கரும்பு, இறைச்சி கோழி, மூலிகைப் பயிர்கள் போன்ற வகைகளில் சாகுபடி முறை பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளன.
    - புதிய சட்டத்தின்படி கொள்முதலாளர் அல்லது உணவு பதப்படுத்தும் நிறுவனத்துடன் விவசாயிகள் ஒப்பந்தம் செய்யும் போது, அன்றைய தினத்தின் விலையையே, பொருள்களை பரிமாற்றம் செய்யும் போது நிர்ணயிக்கும் வகையில் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

## தேசிய நிகழ்வுகள்

- தெற்கு இரயில்வே சார்பில் **லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு விழிப்புணர்வு** வாரத்தையொட்டி **"முள்ளும் மலரும்", "இடம்மாறிப் போச்சு"** ஆகிய குறும்படங்களை வெளியிட்டுள்ளது.
    - இரயில்வேயில் பணிபுரியும் இடங்களில் நன்னெறி தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த குறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளது.
    - இரயில்களை பயன்படுத்துவோருக்கு 155210 என்னும் ஹெல்ப் லைன் வழங்கப்பட்டுள்ளது.

- **பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்பு** (சி.எஸ்.ஆர்) திட்டத்தின்கீழ் சிறப்பாக செயல்பட்ட நிறுவனங்களுக்கு தேசிய விருது வழங்கும் விழா தில்லியில் நடைபெற்றது.
  - இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் சி.எஸ்.ஆர் **திட்டம் கடந்த 2014-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.**
  - ஆண்டுதோறும் அக்டோபர் 2-ம் தேதி சி.எஸ்.ஆர் விருதுகள் வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- வரலாற்றில் முதல்முறையாக கொல்கத்தாவில் **இந்தியா-வங்கதேசம் பகலிரவு டெஸ்ட் ஆட்டம்** நடைபெற உள்ளது.
  - கொல்கத்தா **ஈடன் கார்டன் மைதானத்தில்** போட்டி நடைபெற உள்ளது.
  - பகலிரவு டெஸ்ட் போட்டிகளில் பிங்க் நிற பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

## நியமனங்கள்

- **உச்சநீதிமன்றத்தின் 47-வது தலைமை நீதிபதியாக எஸ்.ஏ.போப்டே** நியமிக்கப்பட்டுள்ளார்.
  - எஸ்.ஏ.போப்டே நவம்பர் 18-ம் தேதி பதவியேற்க உள்ளார்.
  - 2013-ம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார்.

# முக்கிய தினங்கள்

- **ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் = அக்டோபர் 28 – நவம்பர் 2.**
  - முன்னாள் துணை பிரதமர் சர்தார் வல்லபாய் படேல் பிறந்த தினத்தை, அரசு ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்களிடம் ஊழல் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த இவ்வாரம் கடைபிடிக்கப்படுகிறது.
  - மையக்கரு : “நேர்மை – ஒரு வாழ்க்கை முறை” என்ற தலைப்பில் 2019 ஆம் ஆண்டு ஊழல் ஒழிப்பு வாரம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

# திருக்குறள்

குறள் - 2, **அதிகாரம் - கடவுள் வாழ்த்து**

குறள் இயல் - பாயிரம், குறள் பால் - அறத்துப் பால்

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

**விளக்கம்:** தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய திருவடிகளை வணங்காதவர், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?